**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 74/2018**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 29.10.2025 | | |
| பெயர்: | சண்முகம் (DW–1 Cross ) | தகப்பனார் பெயர்: | முருகேசன் |
| கிராமம்: | அல்லிவிளாகம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | தலைமை ஆசிரியர் ஓய்வு | வயது : | 65/2025 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 29.10.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.35)**

1. தாவா சொத்தின் சர்வே எண் என்பது 72/2 ஆகும். அதன் விஸ்தீரணம் 32 ஏர்ஸ் (சுமார் 80 செண்ட்) ஆகும். தாவா சொத்தின் நான்கெல்லையாக கிழக்கு மற்றும் மேற்கில் காசிநாதன் புஞ்சை, வடக்கில் எனது புஞ்சை நிலம், தெற்கில் வாய்க்கால் உள்ளது. வடக்கில் உள்ள எனது புஞ்சை நிலம் முன்பு எனது தாயார் சரஸ்வதி அம்மாளுக்கு சொந்தமாக இருந்தது என்றால் சரிதான். வாதியின் தகப்பனார் பெயர் கஞ்சமலை.

2. தாவா சொத்திற்கான பட்டா (வா.சா.ஆ.1) வாதியின் தகப்பனார் கஞ்சமலை பெயரில் உள்ளது என்றால் அது பெயரளவில் ஏற்பட்டது மற்றும் தயார் செய்யப்பட்டது. கஞ்சமலை பெயரில் பட்டா உள்ளது வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எனக்கு தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து எனக்கு உரிமையானது என்பதற்கான ஆவணம் ஏதும் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை, ஆனால் அனுபவம், வசம் உள்ளது.

3. தாவா சொத்திற்கான பட்டா எனது பெயரில் உள்ளதா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதியான எனது சகோதரர் பெயரிலும் பட்டா இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தை வாதியின் தகப்பனார் கஞ்சமலை உயிருடன் இருந்த காலம் வரை அவர்தான் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. கஞ்சமலை இறப்பிற்கு பின்னர் அவரது மூத்த மகன் என்ற அடிப்படையில் வாதியின் உரிமையிலும் அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

4. தாவா சொத்திற்கான பட்டா எண் என்பது 108 என்றால் சரிதான். மேற்படி பட்டா பெயரளவில் உள்ளது என்பதை மாற்றுவதற்கு சட்ட நடவடிக்கைகள் ஏதேனும் எடுத்துள்ளேனா என்றால் இல்லை. பட்டா எண் 108க்கு வாதி கருணாகரன் கிஸ்தி (வா.சா.ஆ.2) செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதி சவுக்கு பயிரிட்டு வந்தார் என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணம் என்பது சீர்காழி சார்பு நீதிமன்ற வழக்கு எண் 182/2023 என்பது பாகப்பிரிவினை வழக்கு என்றால் சரிதான். அதில் இந்த தாவா சொத்து கிடையாது என்றால் சரிதான்.

5. பி.வா.சா.ஆ.1 ஆவணம் எதற்காக நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இந்த வழக்கின் வாதி எங்கள் மீது பொய்யான பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தார் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமுமில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணம் என்பது யார் பெயரில் சிட்டா – அடங்கல் உள்ளது என்றால் கஞ்சமலை பெயரில் உள்ளது, ஆனால் நாங்கள் தான் சாகுபடி செய்து வருகிறோம், 50 ஆண்டுகளுக்கு மேலாக எங்கள் அனுபவத்தில் இருந்து வருகிறது.

6. பி.வா.சா.ஆ.2 ஆவணம் எவ்வாறு பெறப்பட்டது என்றால் நாங்கள் VAOவிடம் கூறினோம். அவர்கள் வந்து இடத்தை பார்த்து பிறகு சான்றிதழ் வழங்கினார்கள். பி.வா.சா.ஆ.2 ஆவணம் கோரி மனு கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் VAO விடம் எப்போது கேட்டேன் என்றால் 2018ல் நான்

சாகுபடி செய்திருந்த சவுக்கை வெட்டவிடாமல் வாதி தடுத்தபோது, அப்போதுதான் VAOவிடம் கேட்கப்பட்டது. ஆனால் தேதி, மாதம் ஞாபகமில்லை.

7. VAO நாங்கள் சாகுபடி செய்வதை பார்த்து தாசில்தாரிடம் சான்றிதழ் கொடுக்க பரிந்துரை செய்ததின் பேரில் பி.வா.சா.ஆ.2 ஆவணம் கொடுக்கப்பட்டது. ஆய்வு செய்வதற்கு VAO மட்டும் தான் வந்திருந்தார். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடங்கலில் காலம் எண் 6ல் (column 6) கைப்பற்றுதாரருடைய பெயரும் எண்ணும் அல்லது அனுபோகதாரருடைய பெயர் உள்ளது என்றால் சரிதான். அதில் கஞ்சமலை பெயர் உள்ளது என்றால் சரிதான். அதில் எனது பெயர் இல்லை என்றால் சரிதான்.

8. பி.வா.சா.ஆ.2 ஆவணம் நான் மற்றும் எனது சகோதரரால் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனவே பி.வா.சா.ஆ.2 ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடக்கில் எனது நிலம் உள்ள காரணத்தால் அந்த சொத்தோடு சேர்த்து அனுபவிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக பிப்ரவரி 2018ல் ஆக்கிரமிப்பு செய்ய முயன்றோம் என்றால் சரியல்ல. மீண்டும் 12.03.2018ல் ஆக்கிரமிப்பு செய்ய முயன்றோம் என்றால் சரியல்ல. அதை வாதி தடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

9. தாவா சொத்து எனது அனுபவத்தில் இருந்து வருகிறது என்று நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதியின் அனுபவத்திலும் உரிமையிலும் இருந்து வருவதால் வாதி கோரியபடி தீர்ப்பாணை செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.</u>**

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

**(முடிவு நேரம்– 13.03)**